## முத்தமிழ் விழா

நம் பள்ளியின் தமிழ்த் துறைச் சார்பாக முத்தமிழ் விழா ஜூலை 15-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. அவ்விழாவின் சிறப்பு விருந்தினராக ஐ.ஐ.டி முத்தமிழ் மன்றத் தலைவர் திரு. அருணாச்சலம் அவர்கள் கலந்து கொண்டு விழாவினைக் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அன்றைய தினம் பல்வேறு போட்டிகளில் (ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை) மாணவர்கள் கலந்து கொண்டனர். சென்னையைச் சேர்ந்த 18 பள்ளிகள் கலந்து கொண்டு ஆடல், பாடல், நாடகம் என்று முத்தமிழும் சங்கமித்த ஓரிடமாக நம்பள்ளி அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. நடுவர்களாகப் பல பேராசியர்கள் கலந்து கொண்டனர். மதியம் 3 மணியளவில் விழாவில் பங்குபெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா நடைபெற்றது. அவ்விழாவினை நம் பள்ளித்தலைவர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். பள்ளி முதல்வர், துணை முதல்வர், பிரிவுசார் தலைவிகள், நம்பள்ளி ஆசிரியர்கள் மற்றுமல்லாது பல்வேறு பள்ளியைச் சார்ந்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு நம் பள்ளித் தலைவர் பரிசுகள் வழங்கினார். அதிக புள்ளிகள் பெற்ற ஏ.எம்.எம் பள்ளிக்குச் சிறப்புக் கேடயம் வழங்கப்பட்டது. நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.